

தமிழக முதல்வர்,சமூக நீதி காவலர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், திருக்கோவிலூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜேந்திரன் மற்றும் கோமாளூர் வெற்றிவேல் ஆகியோர் ஏற்பாட்டில், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் தெற்கு ஒன்றியம், கோமாளூர் ஊராட்சியைச் சேர்ந்த ஏ.வி.எம்.மூர்த்தி தனது ஆதரவாளர்கள் 150க்கும் மேற்பட்டோருடன் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர், கழகத்தில் இணைந்த அனைவருக்கும், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கழக இரு வண்ண வேஷ்டிகள் மற்றும் புடவைகள் அணிவித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்து வரவேற்றார்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் – ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி

# இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் பேச்சு!



திருக்கோவிலூர், மே 3 - கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு, ஒன்றிய கழக இளைஞரணி சார்பாக வாக்குச்சாவடி இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் சந்தைப் பேட்டை ஆண்டவர் மஹாலில் நடைபெற்றது.

திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பா.விஜயராமன், வினோத் ஏகாம்பரம் ஆகியோரின் வரவேற்புரையில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், கழகக் கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி முன்னிலையில், திருக்கோவிலூர் வடக்கு தெற்கு மேற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.அய்யனார் மொ.இராஜேந்திரன் வ.கிருஷ்ணமூர்த்தி, தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அ.உதயா ஆகியோர்களின் வாழ்த்துரையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசுகையில் கழகத்தின் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்ட அனைவரும் வருகிற 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற சட்டமன்ற தேர்தலில் உங்களுடைய பணி மிகச் சிறப்பான முறையில் இருக்க வேண்டும்,

ஆகவே இன்று முதல் இருந்தே தேர்தல் பணியை உங்களுடைய பகுதிகளில் ஆரம்பித்து விட வேண்டும், மேலும் நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை துண்டு பிரசுர மூலம் பொதுமக்களிடத்தில் வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரம் மூலம் மேற்கொள்ள வேண்டும், அப்படி நீங்கள் திண்ணை பிரச்சாரத்தின் மூலம் நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடத்தில் கொண்டு போய் சேர்த்தாலே மீண்டும் தொடர்ந்து இரண்டாவது முறையாக கழக ஆட்சி அமையும், நமது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றார், மேலும் நமது திராவிட மாடல் அரசின் பல்வேறு முத்தான திட்டங்களால் மக்கள் நமக்கு வாக்களிக்க தயாராக உள்ளனர், ஆகவே கழக நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து நிலை வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்ட அனைவரும் தேர்தல் பணிகளை சுறுசுறுப்புடன் செய்திட வேண்டும் என்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்,

இதில் தொகுதி பொறுப்பாளர் ச.அ.பெருநற்கிள்ளி பேசுகையில் இந்தியாவிலே மிக சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது, நமது திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் ஆட்சி புரியும் முதல்வர்களில் நம்பர் ஒன் முதல்வராக திகழ்ந்து வருகிறார், 24 மணி நேரமும் மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை உருவாக்கி வருகிறார், அப்படி இந்தியாவே ஊற்று பார்க்கும் நமது கழகத் தலைவர் அவர்களை இரண்டாவது முறையாக முதல்வராக பொறுப்பேற்க நாம் அனைவரும் ஒன்று கூடி தேர்தல் பணிகளை செவ்வன செய்திட வேண்டும் என்றும், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் இதுதான் நமது ஒரே இலக்கு என்ற கழகத் தலைவரின் கொள்கைகளை நாம் அனைவரும் பின்பற்று வோம் என்றார்.

இந்தக் கூட்டத்தில் திருக்கோவிலூர் வடக்கு தெற்கு மேற்கு ஒன்றிய கழக துணை அமைப்பாளர்கள் சே.மோகன், மு. ராஜா, அ.ஞானவேல், வே. தயாளன், சு.முருகன், மு.சுமன்ராஜ், ச.பொர்னாட்ஷா, த.ஜெயபிரகாஷ், வெ.வசந்த், கு.ராமராஜ், ப.முருகதாஸ், அ.பாண்டியன் எம்.ஆர்.கே.குமரேசன், ப.சங்கர், சே.சிவராஜ், சு.சுரேஷ், பா.பிரபு, வீ.முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழக இளைஞரணி அமைப்பாளர் க.ஜெயபிரகாஷ் நன்றி கூறினார்.

---

### தஞ்சாவூர் மாவட்டம் -இராசராசசோழன் மணிமண்டபம் - அருங்காட்சியகம்

# ரூ. 3 கோடியே 66 இலட்சம் மதிப்பில் புதுப்பிப்பு!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தார்.

தஞ்சை, மே 3 - தஞ்சாவூர் மாவட்டம் மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டம் மற்றும் அருங்காட்சியகம் மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் முடிக்கப்பட்டு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் 30.04.2025 அன்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில், துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மேயர் சண். இராமநாதன் , துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி , ஆணையர் க.கண்ணன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா , பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டடம்) நாகவேல், தஞ்சாவூர் வட்டாட்சியர் சிவகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாநகராட்சி மாமன்னர் இராசராச சோழனின் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் எனவும், தஞ்சாவூரிலுள்ள மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபம் மேம்படுத்தி பொழிவூட்டப்படும் என கடந்த 02.11.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாநகராட்சி மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபத்தில் மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. என அமைச்சர் பேசுகையில் கூறினார்.

---

### நாமக்கல் மேற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்

# அ.ரவிச்சந்திரன் தாயார் அ.குப்பாயம்மாள் மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!



அ.குப்பாயம்மாள்

நாமக்கல் , மே 3 - நாமக்கல் மேற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினரும், பள்ளியபாளையம் முன்னாள் நகரக் கழகச் செயலாளரும், கண்டிபுதூர் வள்ளி குரூப்ஸ் கலைக்குழு உறுப்பினருமான அ.ரவிச்சந்திரன் தாயாரும், பள்ளிபாளையம்நகரக் கழகப் பொருளாளர் அ.ராஜா ஆகியோரின் தாயாருமான அ.குப்பாயம்மாள் 30.04.2025 புதன்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் இயற்கை எய்தினார்.

அன்னாரின் மறைவுக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தி, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.



வேலூர் மாவட்டம் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காட்பாடியில் உள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கபாடி போட்டி துவக்க நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சுப்புலட்சுமி தலைமையில் நடைப்பெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர், டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கலந்து கொண்டு போட்டிகளை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் மண்டலக்குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜ், ஒன்றியக்குழு தலைவர் வே.வேல்முருகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி தலைவர் பூஞ்சோலை ஸ்ரீனிவாசன், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### இராணிப்பேட்டை மாவட்டம்

# அரக்கோணம் கிழக்கு, அரக்கோணம் மேற்கு, அரக்கோணம் மத்திய - திமிரி கிழக்கு, திமிரி மத்திய, திமிரி மேற்கு - வாலாஜா தெற்கு, வாலாஜா மத்திய, வாலாஜா கிழக்கு - சோளிங்கர் கிழக்கு, சோளிங்கர் மேற்கு, சோளிங்கர் மத்திய, சோளிங்கர் வடக்கு - நெமிலி கிழக்கு, நெமிலி மத்திய, நெமிலி தெற்கு, நெமிலி வடக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் இராணிப்பேட்டை மாவட்டத்திற்குட்பட்ட, **அரக்கோணம் கிழக்கு, அரக்கோணம் மேற்கு, அரக்கோணம் மத்திய** ஆகிய 3 ஒன்றியங்கள் மறுசீரமைக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள ஊராட்சிகள் கொண்டதாக அமைகிறது.

திமிரி கிழக்கு, திமிரி மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **திமிரி கிழக்கு, திமிரி மத்திய, திமிரி மேற்கு** ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாகவும்;

வாலாஜா கிழக்கு, வாலாஜா மத்திய ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **வாலாஜா தெற்கு, வாலாஜா மத்திய, வாலாஜா கிழக்கு** ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாகவும்;

சோளிங்கர் கிழக்கு, சோளிங்கர் மேற்கு, சோளிங்கர் மத்திய ஆகிய மூன்று ஒன்றியங்கள், **சோளிங்கர் கிழக்கு, சோளிங்கர் மேற்கு, சோளிங்கர் மத்திய, சோளிங்கர் வடக்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாகவும்;

நெமிலி கிழக்கு, நெமிலி மேற்கு, நெமிலி மத்திய ஆகிய மூன்று ஒன்றியங்கள், **நெமிலி கிழக்கு, நெமிலி மத்திய, நெமிலி தெற்கு, நெமிலி வடக்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாகவும் பிரிக்கப்பட்டு;

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **அரக்கோணம் கிழக்கு, அரக்கோணம் மேற்கு, அரக்கோணம் மத்திய திமிரி கிழக்கு, திமிரி மத்திய, திமிரி மேற்கு வாலாஜா தெற்கு, வாலாஜா மத்திய, வாலாஜா கிழக்கு சோளிங்கர் கிழக்கு, சோளிங்கர் மேற்கு, சோளிங்கர் மத்திய, சோளிங்கர் வடக்கு நெமிலி கிழக்கு, நெமிலி மத்திய, நெமிலி தெற்கு, நெமிலி வடக்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் அமையும்.

**அரக்கோணம் கிழக்கு ஒன்றியம்:** 1.அம்பரிஷிபுரம், 2.அம்மனூர், 3.அணைகட்டாபுத்தூர், 4.ஆணைப்பாக்கம், 5.அனந்தாபுரம், 6.ஆத்தூர், 7.கீழ்பாக்கம், 8.வேலூர், 9.செய்யூர், 10.மோசூர், 11.முள்வாய், 12.நகரிகுப்பம், 13.பெருமுச்சி, 14.புதுகேசாவரம், 15.புளியமங்கலம், 16.உரியூர் ஆகிய 16 ஊராட்சிகள் மற்றும் தக்கோலம் பேரூர்.

**அரக்கோணம் மேற்கு ஒன்றியம்:** 1.அசமந்தூர், 2.சித்தாம்பாடி, 3.கைனூர், 4.கிழவனம், 5.மிட்டாப்பேட்டை, 6.பெருமாள்ராஜ்பேட்டை, 7.செம்பேடு, 8.தண்டலம், 9.வேடல், 10.மேல்பாக்கம் ஆகிய 10 ஊராட்சிகள்.

**அரக்கோணம் மத்திய ஒன்றியம்:** 1.இச்சிப்புத்தூர், 2.காவனூர், 3.கீழாந்தூர், 4.கீழ்குப்பம், 5.கோணலம், 6.கிருஷ்ணாபுரம், 7.மூதூர், 8.பெருங்களத்தூர், 9.தணிகைபோளூர், 10.உளியம்பாக்கம், 11.வடமாம்பாக்கம், 12.வளர்புரம் ஆகிய 12 ஊராட்சிகள்.

**திமிரி கிழக்கு ஒன்றியம்:** 1.அத்தியானம், 2.அல்லாளச்சேரி, 3.ஆரூர், 4.இருங்கூர், 5.குப்பிடிச்சாத்தம், 6.சிட்டந்தாங்கல், 7.சென்னசமுத்திரம், 8.சொரையூர், 9.தோணிமேடு, 10.நல்லூர், 11.நாகலேரி, 12.பரிக்கல்பட்டு, 13.பாரியமங்கலம், 14.பாலி, 15.பென்னகர், 16.மாந்தாங்கல், 17.மாம்பாக்கம், 18.மேலப்பழந்தை, 19.மேல்நெல்லி, 20.மேல்புதுப்பாக்கம், 21.வாழைப்பந்தல், 22.வேம்பி ஆகிய 22 ஊராட்சிகள் மற்றும் கலவை பேரூர்.

**திமிரி மத்திய ஒன்றியம்:** 1.அகரம், 2.ஆயிரமங்கலம், 3.கலவைபுத்தூர், 4.கனியனூர், 5.குட்டியம், 6.குண்டலேரி, 7.செங்கனாவரம், 8.செய்யாத்துவண்ணம், 9.தாமரைப்பாக்கம், 10.பரதராமி, 11.பழையனூர், 12.பாளையம், 13.பின்னத்தாங்கல், 14.புதூர், 15.பெருமாந்தாங்கல், 16.மழையூர், 17.மேலத்தாங்கல், 18.மேல்நேத்தபாக்கம், 19.மோசூர், 20.வளையாத்தூர், 21.வனக்கம்பாடி, 22.விலாரி, 23.வெள்ளம்பி ஆகிய 23 ஊராட்சிகள் மற்றும் திமிரி பேரூர்.

**திமிரி மேற்கு ஒன்றியம்:** 1.ஆனைமல்லூர், 2.துர்கம், 3.காவனூர், 4.குப்பம், 5.மேல்நாய்க்கன்பாளையம், 6.நம்பரை, 7.பட்டணம், 8.புங்கனூர், 9.வரகூர், 10.வெங்கடாபுரம், 11.பாலமதி ஆகிய 11 ஊராட்சிகள் மற்றும் விளாப்பாக்கம் பேரூர்.

**வாலாஜா தெற்கு ஒன்றியம்:** 1.மணியம்பட்டு, 2.நரசிங்கபுரம், 3.நவ்லாக், 4.தெங்கால் ஆகிய 4 ஊராட்சிகள்.

**வாலாஜா மத்திய ஒன்றியம்:** 1.அனந்தலை, 2.செட்டிதாங்கல், 3.வன்னிவேடு, 4.கல்மேல்குப்பம், 5.மாந்தாங்கல், 6.வி.சி.மோட்டூர், 7.வானாபாடி ஆகிய 7 ஊராட்சிகள்.

**வாலாஜா கிழக்கு ஒன்றியம்:** 1.தென்கடப்பந்தாங்கல், 2.பாகவெளி, 3.சென்னசமுத்திரம், 4.குடிமல்லூர், 5.கடப்பேரி, 6.முசிறி, 7.படியம்பாக்கம், 8.பூண்டி, 9.சாத்தம்பாக்கம், 10.மோட்டூர், 11.செங்காடு, 12.தகரகுப்பம், 13.சுமைதாங்கி, 14.திருமலைச்சேரி, 15.திருப்பாற்கடல், 16.வள்ளுவம்பாக்கம் ஆகிய 16 ஊராட்சிகள்.

**சோளிங்கர் கிழக்கு ஒன்றியம்:** 1.அக்கச்சிக்குப்பம், 2.அய்ப்பேடு, 3.அன்வர்திகான்பேட்டை, 4.நந்திவேடுத்தாங்கல், 5.பரவத்தூர், 6.பாராஞ்சி, 7.மின்னல், 8.வெங்குப்பட்டு, ஆகிய 8 ஊராட்சிகள்.

**சோளிங்கர் மேற்கு ஒன்றியம்:** 1.கொளத்தேரி, 2.கோவிந்தசேரி, 3.கோவிந்தசேரிகுப்பம், 4.ஜம்புகுளம், 5.கேசவனாங்குப்பம், 6.மேல்வீராணம், 7.ஒழுகூர், 8.பொன்னப்பந்தாங்கல், 9.செக்கடிகுப்பம், 10.செங்கல்நத்தம், 11.தகரகுப்பம், 12.தலங்கை, 13.கரடிகுப்பம், 14.வாங்கூர், 15.வேலம் ஆகிய 15 ஊராட்சிகள்.

**சோளிங்கர் மத்திய ஒன்றியம்:** 1.கல்லாலங்குப்பம், 2.காட்ரம்பாக்கம், 3.கொடைக்கல், 4.சோமசமுத்திரம், 5.பாண்டியநல்லூர், 6.புலிவலம், 7.மருதாலம், 8.மேல்வெங்கடாபுரம், 9.ரெண்டாடி, 10.வடகடப்பந்தாங்கல் ஆகிய 10 ஊராட்சிகள்.

**சோளிங்கர் வடக்கு ஒன்றியம்:** 1.ஆயல், 2.கரிக்கல், 3.குன்னத்தூர், 4.கூடலூர், 5.சூரை, 6.தப்பூர், 7.தாளிக்கால், 8.நந்திமங்கலம், 9.பழையபாளையம், 10.போளிப்பாக்கம், 11.வைலாம்பாடி ஆகிய 11 ஊராட்சிகள்.

**நெமிலி கிழக்கு ஒன்றியம்:** 1.திருமாதலம்பாக்கம், 2.ஆட்டுப்பாக்கம், 3.கணபதிபுரம், 4.இலுப்பைத்தண்டலம், 5.கீழ்வெங்கடாபுரம், 6.மாங்காட்டுச்சேரி, 7.பள்ளூர், 8.பின்னாவரம், 9.அரும்பாக்கம், 10.சித்தேரி, 11.பரித்திபுத்தூர், 12.சிறுணமல்லி ஆகிய 12 ஊராட்சிகள்.

**நெமிலி மத்திய ஒன்றியம்:** 1.அரிகிலபாடி, 2.சித்தூர், 3.முருங்கை, 4.பரமேஸ்வரமங்கலம், 5.சயனபுரம், 6.கீழாந்துரை, 7.மேலாந்துரை, 8.மேல்களத்தூர், 9.நாகவேடு, 10.ஓச்சலம், 11.செல்வமந்தை ஆகிய 11 ஊராட்சிகள்.

**நெமிலி தெற்கு ஒன்றியம்:** 1.அகவலம், 2.காட்டுப்பாக்கம், 3.கோடம்பாக்கம், 4.மகேந்திரவாடி, 5.மேலபுலம், 6.நெடும்புலி, 7.பெரப்பேரி, 8.பொய்கைநல்லூர், 9.ரெட்டிவலம், 10.துறையூர், 11.உளியநல்லூர், 12.வெளிதாங்கிபுரம், 13.வேட்டாங்குளம் ஆகிய 13 ஊராட்சிகள் மற்றும் பனப்பாக்கம் பேரூர்.

**நெமிலி வடக்கு ஒன்றியம்:** 1.அசனல்லிக்குப்பம், 2.கீழ்வெண்பாக்கம், 3.ஜாகீர்தண்டலம், 4.நெல்வாய், 5.திருமால்பூர், 6.எலத்தூர், 7.கீழ்களத்தூர், 8.கீழ்வீதி, 9.மேலேரி, 10.வேளியநல்லூர், 11.வேப்பேரி ஆகிய 11 ஊராட்சிகள் மற்றும் நெமிலி பேரூர்.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **அரக்கோணம் கிழக்கு, அரக்கோணம் மேற்கு, அரக்கோணம் மத்திய – திமிரி கிழக்கு, திமிரி மத்திய, திமிரி மேற்கு – வாலாஜா தெற்கு, வாலாஜா மத்திய, வாலாஜா கிழக்கு – சோளிங்கர் கிழக்கு, சோளிங்கர் மேற்கு, சோளிங்கர் மத்திய, சோளிங்கர் வடக்கு – நெமிலி கிழக்கு, நெமிலி மத்திய, நெமிலி தெற்கு, நெமிலி வடக்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அரக்கோணம் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : ஆர்.தமிழ்செல்வன், இராணிப்பேட்டை மாவட்டம்.

**அரக்கோணம் மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : ஆசிரியர் தமிழ்மணி, இராணிப்பேட்டை மாவட்டம்.

**அரக்கோணம் மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : கே.பசுபதி, இராணிப்பேட்டை மாவட்டம்.

**திமிரி கிழக்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : எஸ்.அசோக், இராணிப்பேட்டை மாவட்டம்.

**திமிரி மத்திய ஒன்றியம் :** பொறுப்பாளர் : ஜே.ரமேஷ், இராணிப்பேட்டை மாவட்டம்.

**திமிரி மேற்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : வி.ஜி.ஜனார்த்தனன், இராணிப்பேட்டை மாவட்டம்.

**வாலாஜா தெற்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : டி.சி.பத்மநாபன், இராணிப்பேட்டை மாவட்டம்.

**வாலாஜா மத்திய ஒன்றியம் :** பொறுப்பாளர் : எஸ்.வெங்கட்டராமன், இராணிப்பேட்டை மாவட்டம்.

**வாலாஜா கிழக்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : எம்.சண்முகம், இராணிப்பேட்டை மாவட்டம்.

**சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : வழக்கறிஞர் ஆ.சவுந்தர், இராணிப்பேட்டை மாவட்டம்.

**சோளிங்கர் மேற்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : டி.கிருஷ்ணமூர்த்தி, இராணிப்பேட்டை மாவட்டம்.

**சோளிங்கர் மத்திய ஒன்றியம் :** பொறுப்பாளர் : எஸ்.என்.பூர்ணசந்திரன், இராணிப்பேட்டை மாவட்டம்.

**சோளிங்கர் வடக்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : இ.செல்வம், இராணிப்பேட்டை மாவட்டம்.

**நெமிலி கிழக்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : பெ.வடிவேலு, இராணிப்பேட்டை மாவட்டம்.

**நெமிலி மத்திய ஒன்றியம் :** பொறுப்பாளர் : எஸ்.ஜி.சி.பெருமாள், இராணிப்பேட்டை மாவட்டம்.

**நெமிலி தெற்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : ஆர்.பி.ரவீந்திரன், இராணிப்பேட்டை மாவட்டம்.

**நெமிலி வடக்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : எஸ்.மணிவண்ணன், இராணிப்பேட்டை மாவட்டம்.

### இராணிப்பேட்டை மாவட்டம்

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் ‘முரசொலி’யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேலூர் ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **பாலமதி** ஊராட்சி, **இராணிப்பேட்டை மாவட்டம், திமிரி மேற்கு ஒன்றியத்தில்** செயல்படும்.

"**அண்ணா அறிவாலயம்**",
சென்னை - 18
நாள்- 30.04.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.